**OS**.**No**. 147/2016

**PW**2 - பார்வதி   க/பெ. நடராஜன்

நாள்.05.03.2024

வாதி தரப்பில் சாட்சி  மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 3ம் பிரதிவாதி தரப்பில்  குறுக்கு விசாரணை

1. முதல் வாதி என்னுடைய அக்கா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி கோவிந்தசாமி என்னுடைய அப்பா என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதி என்னுடைய அக்கா என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி என்னுடைய தம்பி என்றால் ஆமாம். என்னுடைய அப்பாவின் அப்பா பெயர் சின்னசாமி கவுண்டர் என்றால் ஆமாம். அவருடைய அப்பா பெயர் அருணாசலக் கவுண்டர் என்றால் ஆமாம்.  அருணாசலக் கவுண்டருக்கு சின்னசாமி கவுண்டர் மற்றும் கெட்டிமுத்துக் கவுண்டர் என்று இரண்டு ஆண் மகன்கள் என்றால் ஆமாம். அருணாசலக் கவுண்டரும் அவருடைய இரண்டு மகன்களும் 16.6.1955 ல் சொத்துக்களை பாகம் செய்து கொண்டார்கள் என்றால் ஆமாம். மேற்படி பாகப்பிரிவிணையில் அருணாசலக் கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.மேற்படி பாகப்பிரிவிணையில்  சின்னசாமி கவுண்டர் மற்றும் கெட்டிமுத்துக் கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் அது பற்றி தெரியவில்லை. சின்னசாமி கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் 1990. அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் என்னுடைய அப்பா கோவிந்தசாமியும் அவருடைய தம்பி சண்முகசுந்தரமும் வாரிசுகள்.

2. சின்னசாமி கவுண்டர் சொத்தில் கோவிந்தசாமிக்கும் அவருடைய தம்பி சண்முகசுந்தரத்திற்கும் பாதி பங்கு பாத்தியம் என்றால் ஆமாம். சண்முகசுந்தரம் அவருடைய பாகத்தில் 1 ஏக்கர் 78 சென்டை நாச்சம்மாள் என்பவருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி தெரியவில்லை. நாச்சம்மாளிடமிருந்து 18.9.1974 ல் என்னுடைய அப்பா மேற்படி சொத்தை கிரயம் வாங்கினார் என்றால் அது பற்றி தெரியவில்லை. சண்முகசுந்தரத்திற்கு திருமணம் ஆகவில்லை என்றால் ஆமாம். 8.3.2007 ல் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். சண்முகசுந்தரத்திற்கு என்னுடைய அப்பா தான் வாரிசு என்றால் ஆமாம். சண்முகசுந்தரம் வாரிசு என்ற

அடிப்படையில் என்னுடைய அப்பாவுக்கு வந்த சொத்தானது அவருடைய தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அருணாசலக் கவுண்டர் வகையில் வந்ததால் அது பூர்விக சொத்து தான். அது என்னுடைய அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றாலும் வழக்கிற்காக பூர்விக சொத்து என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 20.5.1988 ல் க.சா எண் 280 ல் 1 ஏக்கர் பூமியை மோகனசுந்தரம் என்பவருக்கு கிரயம் கொடுத்தார் என்றால் அது பற்றி தெரியவில்லை.17.9.2012 ல் 3ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மென்ட் எழுதிவைத்தார் என்றால் ஆமாம். மேற்படி சொத்தில் 3ம் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார் என்றால் இல்லை. வரிசையாக வீடு கட்டி வாடகைக்கு விட்டுள்ளார்என்றால் இல்லை அதில் ஏற்கனவே ஒரு வீடு உ ள்ளது. அதில் என்னுடைய அப்பா அம்மா குடியிருக்கிறார்கள்.

3. 2ம் பிரதிவாதி பாலமணிக்கு 30.6.2015 ல் 1 ஏக்கர் செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அதன் பின்னிட்டு தான் வழக்கு தாக்கல் செய்தேன். கிருஷ்ணகுமாருக்கு 33 சென்டை தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியவில்லை.வழக்கு சொத்து விவரத்தில் க.சா எண் 280ல் 8.99 ஏக்கரில் பாதி 4.99 ஏக்கரும் கசா எண் 279ல்1ஏக்கர் 73 சென்டில் பாதி 0.86 1/2 எனவும் குறிப்பிட்டுள்ளோம் என்றால் ஆமாம். மேற்படி சொத்துக்களுக்கு செக்குபந்தி குறிப்பிடவிலலை என்றால் ஆமாம். மீதம் பாதி யாருக்கு பாத்தியம் என்றால் அது தெரியவில்லை. மீதி பாதி பாகத்தையும்அதன் உரிமையாளரையும் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் அது பற்றி தெரியவில்லை. இதே சொத்தை பொறுத்து என்னுடைய அத்தைகள் அசல் வழக்கு எண் 146/2005 தாக்கல் செய்துள்ளார்கள் எ ன்றால் அது பற்றிதெரியவில்லை. சொத்தை பொதுவாக அனுபவம் செய்து வருவதை காட்ட பட்டாசிட்டா அடங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். ஆவணம் எதுவும் தாக்கல் செய்யயவில்லை என்றாலும் செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. க,சா 280ல் மொத்தம் எத்தனை உட்பரிவாகியுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. நாங்கள் சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்பதால் அந்த விவரம் தெரியவிலலை என்றால் சரியல்ல. உட்பரியான விவரம் தெரியும் எத்தனை உட்பிரிவு என்பது தெரியாது. எனக்கும் 1ம்வாதிக்கும் எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினோமா என்றால் அனுப்பினோம். அவ்வாறு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய தகப்பனார் தனக்காகவும் மைனர்களுக்காகவும் க.சா எண் 280ல் 20.5.1988 ல் 1 ஏக்கர் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் தெரியவில்லை மேற்படி விவரம் எனக்கு தெரியும்என்றாலும் தெரியாது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1988 ல் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 9-10 இருக்கும். என்னுடைய தகப்பனார் 1988ல் மைனர்களின் படிப்பு செலவிற்கம் பராமரிப்பு செலவிற்காகவும் தான் சொத்துக்களை கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றிதெரியவில்லை. மோகனசுந்தரத்திற்கு கிரயம் கொடுத்த விவரம் எப்போது தெரியவந்தது என்றால் இரண்டு வருடம் முன்னர் வில்லங்கம் போட்டு பார்த்தபோது தான் தெரியவந்தது.

2. இந்த வழக்கில் 20.5.1988 தேதிய மோகனசுந்தரம் பெயரில் உள்ள கிரய பத்திரமானது செல்லத்தக்கது அல்ல எனவும் எங்களை கட்டுப்படுத்தாது எனவும் பரிகாரம் கோரியுள்ளோமா என்றால் ஆமாம். அவ்வாறு எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல.இரண்டு வருடத்திற்கு முன்பு தான் கேட்டுள்ளோம். நான் திருமணம் ஆகும் வரை என்னுடைய தகப்பனார் மற்றும் சகோதரர்களுடன் கூட்டு குடும்பாக தான் இருந்தேன் என்றால் ஆமாம். 1988ல் கிரயம் செய்து கொடுத்த விவரம் எனக்கும் என்னுடைய சகோதரிக்கும் தெரியும் என்றாலும் தெரிந்துயிருந்தும் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 12.7.2017ல் மோகனசுந்தரம் தனது மகன் ரவி பெயரில் ஒரு செட்டில்மென்ட் எழுதிவைத்தார் என்றால் அது தெரியாது. மேற்படி பத்திரமும் செல்லத்தக்கது அல்ல எனவும் எங்களை கட்டுப்படுத்தாது எனவும் பரிகாரம் கோரியுள்ளோமா என்றால் அது பற்றி தெரியவில்லை.18.7.2018 ல் 5ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்து தற்போது 1 ஏக்கர் 6ம்பிரதிவாதியின்

சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது என்றால் ஆமாம். க.சா 280/1 280/2 என உட்பிரிவாகியுள்ளது என்றால் அது பற்றிதெரியவில்லை. மோகனசுந்தரம் 1988 ல் கிரயம் வாங்கிய தேதியிலிருந்து 4 ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு மேற்படி 1 ஏக்கர் 4 ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் இருந்து வந்தது என்றால் அது பற்றிதெரியவில்லை. நாங்கள் சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்பதால் தான் தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்பது கூட தெரியவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு 6 ம் பிரதிவாதியை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2024.03.05 18:10:56 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.